## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 227/2014 | Date : 19.12.2022 | PW2 |
|---|---|---|
| Name: துரைராஜன் | த/பெ. **ரத்தினம்** | |
| Evidence Recorded Time: 12.39 P.M. to 01.50 P.M | | |

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :-**

நான் தற்போது மேட்டூர் சேலம் கேம்ப் பகுதியில் குடியிருந்து வருகிறேன். 40 ஆண்டுகளாக மேற்படி பகுதியில் தான் குடியிருந்து வருகிறேன். குட்டப்பட்டியில் நான் குடியிருக்கவில்லை. ஆர்.சி பிளாண்ட் குடியிருப்பில் நான் 1982 முதல் 1992 வரை பத்துவருடங்களாக குடியிருந்து வந்தேன். ரத்தினம் எனது அப்பா ஆவார். என் அப்பா ஆர்.சி பிளாண்டில் வேலை செய்து வந்தார். என் அப்பாவிற்கு ஒதுக்கப்பட்ட குடியிருப்பில் நான் குடும்பத்தினருடன் குடியிருந்து வந்தோம் என்றால் சரிதான். இந்த வழக்கில் என் அம்மா ஒரு வாதி என்றால் சரிதான், அவர் எத்தனாவது வாதியாக உள்ளார் என்றால் தெரியாது. நான் எத்தனாவது வாதி என்றால் நினைவில்லை. என்னுடைய முதல் விசாரணையை மற்ற வாதிகளுக்கும் சேர்ந்துதான்தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் மொத்தம் எத்தனை வாதிகள் என்று தெரியாது. வழக்குரையை யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றாலும் 2014-ல் எத்தனை வாதிகள் சேர்ந்து தயார் செய்து வழக்கை தாக்கல் செய்தார்கள் என்பது தெரியாது என்றாலும் சரிதான். எனது முதல் விசாரணை பிரமாண பத்திரத்தில் வழக்கு சொத்து என தாத்தா துரைசாமி பிள்ளை, த/பெ.நாராணய பிள்ளை என்பவருக்கு எவ்வாறு பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன் என்றால் பூர்வீகமாக பாத்தியப்பட்டது என்று சொல்லியுள்ளேன். வழக்கில் எந்தெந்த பிரதிவாதிகள் பதிலுரை தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் குமரேசன் என்பவதால் பதில் உரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. குமரேசன் என்பவர் இந்த வழக்கில் எத்தனையாவது பிரதிவாதி என்றால் தெரியாது. வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேன் என்றால் படித்துப்பார்த்துள்ளேன். பதிலுரையை படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்துபார்த்துள்ளேன். இந்த வழக்கில் குமரேசன் என்பவர் வழக்கின் தரப்பினர் அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கில் பிரதிவாதிகள் யார் யார் என்றால் சம்பூரணம், காஞ்சனா, உமா மகேஸ்வரி பார்த்தசாரதி, முருகேசன் ஆகியோர்கள் வழக்கு தாக்கல் செய்துள்ளார், வேறு யாரேனும் உள்ளார்களா என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றால் சரியல்ல. வழக்கில் 2-ம் பிரதிவாதி பதிலுரை தாக்கல் செய்யப்பட்டு அதனை 3 முதல் 5 பிரதிவாதிகளால் பதிலுரை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியாது. துரைசாமி பிள்ளை என்பவருக்கு பூர்ணமாய் பாத்தியப்பட்டது என்றாலும்

அது பூர்வீக சொத்து இல்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களில் ஒரு சில சொத்துக்கள்தான் பூர்வீக சொத்து என்றாலும் மற்ற சொத்துக்கள் சுயராஜ்ஜியதாக பாத்தியப்பட்டது என்றால் சரிதான். 20.06.1968–ல் துரைசாமி இறந்துவிட்டார் என்றால் சரிதான். 02.11.1955–ல் அவருடைய சொத்துக்களை யார் யார் அனுபவிக்க வேண்டும் என்று ஒரு பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணத்தை எழுதி வைத்துள்ளரா என்றால் எழுதி வைத்துள்ளார். அதனால் வழக்குரையில் துரைசாமி சொத்தை பொறுத்து எதுவும் எழுதி வைக்காமல் இறந்துவிட்டார் என்று சொல்வது தவறு என்றால் தவறுதான். அமிர்தலிங்கத்தின் அப்பா பெயர் நடராஜன், த/பெ.ராமசாமிபிள்ளை என்றால் சரிதான். மேற்படி நடராஜன் 02.08.2015–ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். அவர் எழுதிக்கொடுத்ததாக சொல்லப்படும் பவர் பத்திரம் அவர் இறந்தவுடன் ரத்தாகி விட்டது என்றால் சரிதான். பவர் ஏஜெண்டு இறந்த பிறகு அவர் மூலமாக வழக்கை நடத்த முடியாது என்றால் சரிதான். வழக்குதாக்கல் செய்த பின் பதிலுரை தாக்கல் செய்த காலம் வரை நடராஜன் மூலமாக நடதப்பட்டது என்றால் அதுபற்றி தெரியாது. எனக்கு முன்பு சாட்சியம் அளித்த விமலா எனக்கு சித்தி உறவு முறை வேண்டும். என் பெரியம்மாக்கள் பெயர்கள் ராமநாதம்மாள், லட்சுயம்மாள் ஆகும், சித்திகள் பெயர் ஜானகி, பாக்கியம், சம்பூரணம், விமலா ஆகும். மேற்படி பெரியம்மாள்களுக்கும் சித்திகளுக்கும் எந்த ஆண்டு திருமணங்கள் நடைபெற்றது என்றால் தெரியாது. வேறு வேறு ஊர்களில்தான் திருமணம் செய்து கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். அவரவர்களுக்கு திருமணம் நடைபெற்ற பிறகு அவரவர் கணவர் வீட்டில்தான் குடியிருந்து வந்தார்கள் என்றால் அங்கு குடியிருந்தார்கள், காட்டிற்கு வந்து செல்வார்கள். ஜானகி, விமலா ஆகியோர்கள் அரசு பணியில் இருந்தார்கள். மேற்படி நபர்கள் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இருந்தார்கள் என்பதற்கு ஆதாரங்கள் ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. துரைசாமி பிள்ளை எந்த தேதியில் இறந்ததாக என்னுடைய முதல் விசாரணையில் சொல்லியுள்ளேன் 20.06.1965 ஆகும். பாட்டி பாப்பாயம்மாள் 1970 லும், தாத்தா துரைசாமி பிள்ளை 1968 லும் இறந்தார்கள் என்றாலும் எனக்கு அவர்கள் இறந்த ஆண்டு கூட தெரியாது என்றால் சரியல்ல. என் அம்மா பெயர் பர்வதவர்த்தினி ஆகும். எனது தாத்தாவின் முதல் மகள் பெயர் ராமநாதம்மாள் அவரின் மற்றொரு பெயர் ராமக்காள் ஆகும். மேற்படி ராமநாதம்மாள் 31.12.1957–ல் இறந்ததாக சொல்லியுள்ளேன். மேற்படி எனது தாத்தா, பாட்டி, ராமநாதம்மாள் இறப்பிற்கு இறப்பு சான்றிதழ்களை ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். மேற்படி ராமநாதம்மாள் 1958–ல் இறந்தார் என்றால் சரியல்ல. ராமநாதம்மாளின் கணவர் பெயர் நடராஜன் ஆகும். ராமநாதம்மாளுக்கும் நடராஜனுக்கும் ஜோதிலிங்கம், ராமநாதபிள்ளை வாரிசுகள் ஆவார்கள். ஜோதிலிங்கம் இறந்துவிட்டார், ராமநாதபிள்ளை வாதியாக இருந்து பிரதிவாதியாக மாறியுள்ளார். ராமநாதம்மாள் இறந்தவுடன் லட்சமி (எ) லட்சுயம்மாளை இரண்டாவதாக திருமணம்செய்து கொண்டார். மேற்படி நடராஜனுக்கும்

லட்சுமிக்கும் அருணோதயம் மற்றம் அம்சவள்ளி ஆகியோர் வாரிசுகள் ஆவார்கள். எனது குடும்ப நபர்கள் என சொல்லும் வாதிகளின் பெயர்களே எனக்கு தெரியாது என்றால் சரியல்ல. வழக்கில் முதல் விசாரணை நிரூபண பிரமாண பத்திரம் தாக்கல் செய்த தேதியில் 1–ம் வாதியின் பெயர் தெரியுமா என்றால் சம்பூரணம்மாள். நான் சொல்வது தவறு என்றாலும் முதல் விசாரணை தாக்கல் செய்திருக்க கூடிய தேதியில் 1–ம் வாதி யார் என்பது கூட தெரியாமல் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. லட்சுமி (எ) லட்சுமியம்மாள் என்பவர் ஜோதிலிங்கம், ராமநாதபிள்ளை ஆகியோர்களை பராமரித்து வந்ததற்கான ஆவணங்களை ஒப்படைத்துள்ளேனா என்றால் இல்லை. ஜோதிலிங்கம் எந்த தேதியில் இறந்தார் 29.08.2014–ல் இறந்தார். அதற்கு ஆவணங்களை ஒப்படைத்துள்னோ என்றால் இல்லை. அவருக்கு சம்பூரணம் என்ற மனைவி உள்ளார். அவர்களுக்கு வாரிசு உள்ளார்களா என்றால் வளர்ப்பு மகள் சூர்யாஜோதி உள்ளார். மேற்படி சூர்யாஜோதியை எந்த தேதியில் வளர்ப்பு மகளாக தத்தெடுத்துக்கொண்டார்கள் எனக்கு தெரியாது என்றாலும் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியதான். ஜானகியம்மாள் எந்த தேதியில் இறந்தார் என்றால் 1994–ல் இறந்ததாக சொல்லியுள்ளேன், தேதி நினைவில்லை. ஜானகியம்மாளுக்கு ஒரே ஒரு வாரிசுதான் அவர் அமிர்தலிங்கம். அவர் தற்போது எங்குள்ளார் என்றால் லண்டனில் உள்ளார், அங்கு என்ன பணியாற்றுகிறார் என்று தெரியாது. இந்த வழக்கு விவரங்கள் அமிர்தலிங்கத்திற்கு தெரியுமா என்றால் தெரியும். வழக்கில் அமிர்தலிங்கத்திற்கு என்ன முகவரி கொடுக்கப்பட்டுள்ளது என்று எனக்கு தெரியாது. வழக்கு சொத்துக்களில் நான் சுவாதீனத்தில் இருக்கிறேனா என்றால் தற்போது இல்லை. எப்போது இருந்து நான் வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் இல்லை என்றால் 2014–ம் ஆண்டு வரை சுவாதீனத்தில் இருந்தேன், அதற்கு பிறகு சுவாதீனத்தில் இல்லை. மேற்படி விவரங்களை வழக்கில் சொல்லியுள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியும். எந்த தேதியில் இருந்து சுவாதீனத்தில் இல்லை என்றால் தேதி நினைவில்லை. அசல் வழக்கு எண்.754/1987 என்ற வழக்கு குறித்து எனது பிரமாண பத்திரத்தில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்படி அசல் வழக்கு எந்த நீதிமன்றத்தில் நடைபெற்றது என்று தெரியாது. அதில் யார் வாதி, பிரதிவாதி, என்ன பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டது குறித்து எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி வழக்கில் எந்த தேதியில் தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் 1994–ல் வழங்கப்பட்டது ஆனால் தேதி நினைவில்லை. அசல் வழக்கு எண்.111/2010 என்ற வழக்கு எந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது என்றால் மேட்டுர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது, குறிப்பாக எந்த நீதிமன்றம் என்று தெரியாது. அந்த வழக்கு குமரேசன் என்பவர் தாக்கல் செய்தார். அந்த வழக்கில் பிரதிவாதிகள் யார் என்றால் ஜோதிலிங்கம், ராமநாதன், லட்சுமியம்மாள், பர்வதவர்த்தினி, அமிர்தலிங்கம், பாக்கியம், விமலாம்மாள் ஆகியோர்கள் மீது தாக்கல் செய்தார். குத்தகைக்கு ஓட்டுவதாக

சொல்லி தாக்கல் செய்தார். அவர் குத்தகை தாரர் இல்லை என்று தீர்ப்பானது. நான் மேற்படி தீர்ப்பை பார்த்துள்ளேன். என்னுடைய முதல் விசாரணையில் அந்த வழக்கு பகுதியாக அனுமதிக்கப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். தீர்ப்பையும், தீர்ப்பாணையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கில் துரைசாமிபிள்ளை எழுதி வைத்தாக சொல்லக்கூடிய உயில் குறித்து ஒத்துக்கொண்டுள்ளேனா அல்லது அவ்வாறு எழுதி வைக்க அவருக்கு உரிமை இல்லை என்று கூறியுள்ளேனா என்றல் உரிமை இல்லை என்று என்னுடைய முதல் விசாரணையில் கூறியுள்ளேன். முந்தைய வழக்குகளிலும் மேற்படி உயில் எழுதிக்கொடுக்கப்பட்டது உண்மை என்று வழக்காடப்பட்டு வந்தது. இந்த வழக்கில் உயிலை ஒப்புக்கொண்டு தான் வழக்கை நடத்தி நடத்தி வருகிறோமா என்றால் இல்லை. இதற்கு முந்தைய வழக்குகளில் வழக்குகளை நடத்தியவர்கள் அந்த உயிலை ஒப்புக்கொண்டு நடத்தினார்களா அல்லது மறுத்து வழக்கு நடத்தி வந்தார்களா என்றால் ஒப்புக்கொண்டுதான் நடத்தி வந்தார்கள். உயில் பதிவு செய்யப்பட்ட உயில் என்றால் சரிதான். எனது முதல் விசாரணையில் வாதிகளாகிய நாங்கள் அந்த உயில் சாசனத்தை நீக்குறவு செய்து கொள்கிறோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். அந்த உயிலை நீக்குறவு செய்யமுடியாது என்றாலும் அந்த உயிலை மறுக்கமுடியாது என்றாலும், ஏற்கனவே உயிலை பொறுத்து தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் அதனை மறுத்து என்னால் சாட்சி கூற முடியாது என்றால் சரியல்ல. ஏற்கனவே நடந்த அசல் வழக்கு எண்கள்.754/1987 மற்றும் 111/2010 தீர்ப்புகள் மற்றும் தீர்ப்பாணை நகல்களை இந்த வழக்கில் ஒப்படைத்துள்ளேனா என்றால் ஒப்படைத்துள்ளேன். நான் சொல்வது போல தீர்ப்புகளை ஒப்படைக்கவில்லை என்றாலும் மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. குமரேசன் 29.04.2021-ல் இறந்தார். நான் முதல் விசாரணை தாக்கல் செய்வதற்கு முன்பு இறந்துவிட்டார் என்றால் சரிதான். குமரேசன் இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கப்பட்டுள்ளதா என்றால் தெரியாது. குமரேசன் சொத்துக்களை அபகரிக்க முயற்சி செய்வதாக பொய்யாக கூறுகிறேன் என்றாலும், அவர் அப்படி செய்திருந்தால் அவரை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்திருப்பேன் என்றாலும் அவரை தரப்பினராக சேர்க்காமல் அவர் மீது குற்றாச்சாட்டினை முன் வைக்கமுடியாது என்றாலும் சரியல்ல. பாகப்பிரிவினைஎந்த தேதியில் கேட்டோம் என்று தேதி நினைவில்லை. மேற்படி பாகப்பிரிவினை கேட்ட தேதியை முதல் விசாரணையில் சொல்லியுள்ளது நினைவில்லை. பாகம் பிரித்து தரசொல்லிக்கேட்டு வழக்கறிஞர் அறிவிப்பு கொடுத்தேனா என்றால் இல்லை. பாகம் கேட்ட போது உடனே குமரேசன் எங்கள் மீது வழக்கு தாக்கல் செய்தார். பாகம் கேட்ட தேதி தெரியவில்லை, 2010-ம் ஆண்டு ஆகும். மேற்படி பாகம் கேட்டதையும், வழக்கு தாக்கல் செய்த விவரத்தையும் இந்த வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் அந்த வழக்கு முடிந்து விட்டதால் அதுபற்றி இந்த வழக்கில் கூறவில்லை. 2010-ம் ஆண்டிலும் பாகப்பிரிவினை

கேட்கவில்லை என்றாலும் வழக்கி தாக்கல் செய்த காலத்திலும் கேட்கவில்லை என்றாலும், உயில் எழுதியது வழக்காடிவிட்டு அதற்கு மாறாக சாட்சியம் அளிக்க எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.111/2010 வழக்கு பகுதியாக தள்ளுபடி செய்யப்பட்டது சம்மந்தமாக குமரேசன் மேல்முறையீட்டு வழக்கு எண்.8/2015 தாக்கல் செய்தார் என்றால் சரிதான்.மேற்படி மேல்முறையீடு யார் தாக்கல் செய்தார் என்றாலும் , யார் மீது தாக்கல் செய்யப்பட்டது என்றாலும் தெரியாது. வழக்கு சொத்துக்களை பொறுத்து வாதிகளும், பிரதிவாதிகளும் பாகம் பிரித்துக்கொள்ளும் உரிமை இல்லாதவர்கள் என்றால் சரியல்ல. உயிலில் துரைசாமி பிள்ளை எழுதிவைத்த படி அவரது பெண் மக்கள் அவர்களது ஆயுள் வரை குத்தகை வருமான பலன்களை மட்டுமே அனுபவிக்க உரிமையுள்ளது என்றாலும், அவர்களது காலத்திற்கு பிறகு அவர்கள் வாரிசுகள் மட்டுமே பாகப்பிரிவினை பெய உரிமை உடையவர்கள் என்றாலும் துரைசாமி பிள்ளையின் வாரிசுகள் உயிருடன் இருக்கும் வரை பாகப்பிரிவினை கேட்க உரிமை இல்லை என்றாலும் சரியல்ல. அந்த காரணத்தினால்தான் உயிலை பொறுத்து மாறுபட்ட சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பாகம் எதுவென்று குறிப்பாக சொல்லாத காரணத்தினால்தான் வழக்கு தாக்கல் செய்துள்ளோம். மேற்படி விவரத்தை நாங்கள் வழக்கில் எந்த இடத்திலும் கூறவில்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு முதிராத வழக்கு என்றாலும் அதனால் நாங்கள் கோரியிருக்கும் பரிகாரம் எதுவும் பெறமுடியாது என்றால் சரியல்ல. வழக்கு சொத்துக்களுக்கு 1 ம் பிரதிவாதியாக காட்டப்பட்டுள்ள சம்பூரணம் (எ) சம்பூரண வள்ளியம்மாளின் கணவர் குமரேசன் சட்டப்படியான குத்தகைதாரராக அவர் இறக்கும் வரை அனுபவித்து வந்தார் என்றாலும், அவருக்கு பின் அவருடைய வாரிசுகள் வழக்கு சொத்துக்களை குத்தகைதாரர் என்ற முறையில் அனுபவித்து வந்தார்கள் என்றாலும், மேற்படி சங்கதிகளை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றாலும, குமரேசனை தரப்பினராக சேர்க்காத காரணத்தினாலும் இந்த வழக்கு நிலைக்க தக்கது என்றாலும் சரியல்ல. உண்மைகளை மறைத்து இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளதால் இந்த வழக்கை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்துக்களை குத்தகைதாரர் என்ற முறையில் 1-ம் பிரதிவாதியும், அவரது கணவர் குமரேசனும் மேம்படுத்தி அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் இல்லை நாங்கள் அனைவரும் சேர்ந்து தான் செய்தோம். இது தொடர்பாக 1-ம் பிரதிவாதியும், அவரது கணவரும் துரைசாமியின் வாரிசுகளை அழைத்து மேம்படுத்த ஆன செலவுகளை கூறி என்ன செய்யலாம் என்று கூறினார் என்றால் கூறினார். எவ்வளவு செலவு செய்தீர்கள் என்று 2010 -ற்கு முன்பே அவ்வாறு கேட்டோம். நாங்கள் இவ்வளவு செலவு செய்துள்ளோம் என்பதற்கு கணக்கு ஒப்படைத்தோமா என்றால் இல்லை. 2010-ல் செலவு செய்து மேம்படுத்திய விவரத்தை வழக்கில் சொல்லியுள்ளோமா என்றால் சொல்லவில்லை. அவர் கேட்டது உண்மை என்றாலும் முறையாக எந்த பதிலும்

சொல்லவில்லை என்றாலும், பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. இந்த வழக்கில் குத்தைகக்கு விட்ட விவரத்தை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. குமரேசனுக்கு எதிராக அவதூறு கூறியுள்ளோம் என்றால் சரியல்ல. அவசரகதியாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அதனால் தான் 1–ம் வாதியின் கணவர் பெயர் குமரேசன் என்று குறிப்பிட்டோள்ளோம் என்றால் சரியல்ல. எந்த பாகமும் கோரவில்லை என்றாலும் பாகம் கோர எந்த முகாந்திரமும் இல்லை என்றாலும், குமரேசன் குறித்த சங்கதிகள் தவறு என்றாலும் சரியல்ல. வழக்கு சொத்திற்கு 2014–ல் எவ்வளவு மதிப்பு இருக்கும் என்றால் தெரியாது. வழக்கில் எவ்வளவு மதிப்பு கட்டியுள்ள விவரம் தெரியாது. இன்றை மதிப்பும் தெரியாது. வழக்கில் முழுமையான சொத்து விவரம் காட்டப்படவில்லை என்றாலும் வீட்டுக்கு அளவு விவரம் மற்றும் அமைப்புகள் பற்றி சொல்லவில்லை என்றால் சரியல்ல. சொத்துக்களுக்கு தனிதனி மதிப்பீடு காட்டவில்லை என்றால் சரியல்ல. மேற்படி சொத்துக்களில் தண்ணீர் பாய்ச்சும் வசதிகள் முதற்கொண்டு அனைத்து வசதிகளையும் குமரேசனால் தனிப்பட்ட முறையில் அமைக்கப்பட்டது என்றால் சரியல்ல. உண்மைகளை மறைத்து 1–ம் பிரதிவாதியிடமிருந்த ஆதாயம் பெறவேண்டும் என்பதற்காக இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. முன்னுக்குப்பின் முரணாக உயிலை பற்றி தெரிவித்து இந்த வழக்கை நடத்தி வருகிறேன் என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

ஒம்/–PW2,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.